கடை
வாடகைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக இயங்கிவரும் சுப்பர்மார்க்கற் வாடகைக்குண்டு.

077 035 8497

10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 46 வியாழக்கிழமை ஜூன் 22 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## கிழிந்தது சிங்கம்!

வடக்கு மாகாணசபையில் பறக்கவிடப்பட்டிருக்கும் இலங்கை தேசியக் கொடி கிழிந்து தொங்கிய நிலையில் காணப்படுகின்றது. வடமாகாண சபையின் 97ஆவது அமர்வு இன்று காலை 10 மணியளவில் கைதடியில் உள்ள பேரவைக் கட்டடத்தில் ஆரம்பமாகியது. அங்கு செய்தி சேகரிப்பிற்காகச் சென்றிருந்த ஊடகவியலாளரினால் தேசியக் கொடி கிழிந்து தொங்குவது அவதானிக்கப் பட்டுள்ளது. இவ்வாறே கடந்த மாதமும் மாகாணசபைக் கொடி கிழிந்து தொங்கிய நிலையில் காணப்பட்டது. அதன் படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டதால் உடனடியாக புதிய கொடி மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-01)





# ‘கப்சிப்’!

ஒருவாரகால கடும் சர்ச்சைகளின் பின் இன்று கூடிய வடமாகாண சபையின் அமர்வு -எதிர்பார்ப்புக்கு மாறாக- மிக அமைதியாக நடைபெற்று முடிந்துள்ளது.

வடமாகாண சபையின் 97ஆவது அமர்வு இன்று காலை 10 மணியளவில் கைதடியில் உள்ள பேரவைக்கட்டடத்தில் ஆரம்பமானது. அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம் சபை அமர்வை ஆரம்பித்தவுடன் நகை அடகு நியதி சட்டம் தொடர்பான குழு விவாதத்தை ஆரம்பித்துவைத்தார். அது தொடர்பான விவாதம் கூட மிக அமைதியான முறையில் நடைபெற்றது. எந்த ஒரு உறுப்பினரும் கடந்த வாரகால அரசியல் குழப்பங்கள் தொடர்பில் தப்பித் தவறிக்கூட ஒரு வார்த்தையேனும் சொல்லவில்லை. அனைவரும் வழமைக்கு மாறாகத் தமது கருத்துக்களை மிக நிதானமாக முன்வைத்ததையும் காணமுடிந்தது. அத்துடன் கடந்த வாரம் நீதிக்கான அணி, முதலமைச்சர் அணி என இரண்டு பட்டு ஒரு வரையொருவர் பொதுவெளியில் கருத்துக்களால் மோதிக் கொண்ட மாகாண சபை உறுப்பினர்கள், இன்று ஒவ்வொருவரினதும் ஆசனங்களுக்கும் வலியச் சென்று குசலம் விசாரித்து, உரையாடி மகிழ்ந்ததையும் காணமுடிந்தது. (எ-1)


## ரூபா சரிவு

அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி முதன்முறையாக 155 ரூபாவைத் தாண்டியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய பரிமாற்றம் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஆ)

## நெற்றியில் கோடரி

பெண்ணொருவர் வைத்தியசாலையில்



ஐந்து பிள்ளைகளின் தாயொருவர், நெற்றியில் கொத்தப்பட்ட கோடரியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவமொன்று, குருநாகலில் இடம்பெற்றுள்ளது. கோடரியினால் நெற்றியில் கொத்தப்பட்ட 37 வயதான அந்த தாய், பிரதேச வாசிகளின் உதவியுடன், கோடரியுடனேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.குடும்பப் பிரச்சினை காரணமாக, அந்தப் பெண்ணின் மீது அவருடைய கணவனே கோடரியினால் கொத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## கசிப்பு உற்பத்தி
### 25 வயது பெண் கைது



கரவெட்டி துன்னாலை மேற்கில் கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டுவந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இன்று அதிகாலை நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி பியந்த தலைமையிலான பொலிஸ் குழுவி னர் குறித்த 06

## தேர்தலை உடன் நடத்துங்கள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தாமதிக்கப்பட்டால், மாகாண சபை தேர்தலும் பாதிப்புக்கு உள்ளாகும் என, தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன. இதனால் தேர்தலை தாமதிக்காது விரைவாக நடத்த, நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை உறுதிப்படுத்துமாறு அவ்வமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (எ)

## ஒழுங்கு மாறினாலும் வரிசை மாறவில்லை!

ஐங்கரநேசன்,குருகுலராஜா முன்வரிசையில்



பதவி நீக்கம் செய்யப்பட்ட வடமாகாண அமைச்சர்கள் இருவருக்கும் இன்றும் முன்வரிசை ஆசனங்களே ஒதுக்கப்பட்டன. கடந்தவாரம் சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கை, நம்பிக்கையில்லாப் பிரேரணை போன்ற குழப்பங்களையடுத்து வடமாகாணக் கல்வியமைச்சர் த.குருகுலராஜாவும், விவசாய அமைச்சர் ஐங்கரநேசனும் 06



வடமராட்சி கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டம் இன்று 100 வது நாளை எட்டியுள்ளது.

## சிவாஜி, ரிஷாட், ஞானசாரர்
# இனவாத குற்றச்சாட்டு

இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்கு களங்கம் ஏற்படும் வகையில் கருத்துகள் வெளியிட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். கே.சிவாஜிலிங்கம், அமைச்சர் ரிஷாட் பதியூதீன் மற்றும் பொதுபல சேனா







அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஆகியோருக்கு எதிரான விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான பிரியந்த 06

தமிழர் தாயகத்தின் முதல் மாலைத் தினசரி

# பலாத்கார முயற்சி வாங்கி கட்டிய பொலிஸ் சார்ஜென்ட்

சீருடையில் சென்ற பொலிஸ் சார்ஜென்ட் ஒருவர், பெண்ணொருவரை பலவந்தப்படுத்தி, பாலியல் வன்புணர்வுக்கு முயன்றபோது, அப்பெண் தாக்கியதில், சார்ஜென்ட் படுகாயமடைந்துள்ளார். இந்த சம்பவம், அனுராதபுரம் கெப்பத்திகொல்லாவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடும் காயங்களுக்கு உள்ளான சார்ஜென்ட், அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகின்றார்.

பொலிஸ் சான்றிதழை பெறுவதற்காக சென்றிருந்த பெண்ணின் முகவரியை அறிந்து நேற்று குறித்த பொலிஸ் சார்ஜென்ட் அந்த பெண்ணின் வீட்டுக்கு சென்றிருந்தார். அங்கு அவர் அப்பெண்ணை பலவந்தப்படுத்தி, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்துவதற்கு முயன்றுள்ளார். எனினும், சார்ஜென்ட்டிடமிருந்து தப்புவதற்காக, அப்பெண் பொல்லால் சார்ஜென்டை தாக்கியுள்ளார். அதன்பின்னர், கெப்பத்திகொல்லாவ பொலிஸ் தலைமையகத்துக்கு தொலைபேசியின் ஊடாக அறிவித்துள்ளார். (உ)

# மாகாணசபை உறுப்பினரின் தன்னிலை விளக்கக் கூட்டம்



முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணயில் கையொப்பமிட்டவர்களில் ஒருவரும், நீதிக்கான அணியைச் சேர்ந்தவருமான வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் பொதுமக்கள் மத்தியில் தன்னிலை விளக்கமளிக்கவுள்ளார்.

இலக்கம் 15, அழகு நிலா, அரசடி வீதி, வதிரி, கரவெட்டி எனும் முகவரியில் அமைந்துள்ள இடத்தில், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு இந்தத் தன்னிலை விளக்கச் சந்திப்பு நடைபெறவுள்ளது. இதன்போது மக்களின் கேள்விகளுக்கும் அவர் பதிலளிக்கவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் இதில் கலந்துகொள்ளலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# மீளப்பெற்றார் ஞானசாரர்

தன்னை கைதுசெய்வதை தடுக்குமாறுகோரி, பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர், உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவை, வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளார். நேற்றையதினம் நீதிமன்றில் சரணடைந்திருந்த ஞானசாரர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் தன்னை கைதுசெய்வதை தடுக்குமாறுகோரி தாக்கல் செய்த மனுவை அவர் மீளப் பெற்றுள்ளார். (உ)

# குற்றவியல் சட்டக்கோவை மீளப்பெறப்பட்டது

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலத்தை வாபஸ் பெற்றுக்கொள்வதாக, உயர்நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் அறிவித்துள்ளார் என்று, சபாநாயகர் கரு ஜயசூரிய, நாடாளுமன்றத்தில் இன்று அறிவித்துள்ளார். சபை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், சபாநாயகர் அறிவிப்பின் போதே அவர் மேற்கண்டவாறு அறிவிப்பை விடுத்தார். (உ)

# நுளம்புத் தொல்லை அதிகரிப்பு

டெங்கு நுளம்பின் அடர்த்தி, கடந்த வருடங்களுடன் ஒப்பிடப்படுமிடத்து, ஆறு சதவீதத்தால் அதிகரித்துள்ளதென, பூச்சியியல் பற்றிய ஆய்வுகளை நடத்திவரும் அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

டெங்கு நோய்த்தொற்று அதிகரித்துவரும் மாவட்டங்களில், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போதே, இவ்விடயம் தொடர்பில் கண்டறியப்பட்டதாக, மேற்படி சங்கத்தின் தலைவர் நஜின் சுமனசேன தெரிவித்தார்.

இதேவேளை, டெங்கு நுளம்புகள் பரவும் இடங்கள் உடனடியாக நிர்வகிக்கப்படாமையால், டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதிலும் சிக்கல் நிலை எழுந்துள்ளதாக, தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவிக்கின்றது. (உ)

# நடு வீதியில் திடீர்த் தீ எரிந்தது மோட்டார் சைக்கிள்

கொழும்பு, தெமட்டகொட வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் திடீரென இன்று காலை தீ பரவியுள்ளது.

இந்த தீயினால் மோட்டார் சைக்கிள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், அதன் அருகில் இருந்த இரு மோட்டார் சைக்கிள்கள் மீதும், தீ பரவி சேதமாகியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதன்போது, உயிர் ஆபத்துக்கள் இடம்பெறவில்லை. சம்பவம் தொடர்பில், தெமட்டகொட பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# ஜே.வி.பியால் நாட்டுக்கு நாசம்

ஜே.வி.யால் நாட்டுக்கு சேதமும் நாசமும் ஏற்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயபால ஹெட்டியாராச்சி தெரிவித்தார். 30 வருடப் போரின் மூலம் நாட்டுக்குப் புலிகள் ஏற்படுத்திய சேதத்தைவிட ஜே.வி.பி. ஏற்படுத்திய சேதங்கள்தான் அதிகம் என்றும் அவர் தெரிவித்தார்.

"அரசியல் அதிகாரம் இல்லாதவர்கள் இந்த அரசுக்கு எதிராக எதையும் கூற முடியும். ஜே.வி.பி. கண்ணை மூடிக்கொண்டு அரசை விமர்சிக்கின்றது. நாம் ஜனநாயகத்தை மதித்துச் செயற்படுவதாலேயே ஜே.வி.பிக்கு நாடாளுமன்றில் கோப் குழுவின் தலைவர் பதவியைக் கொடுத்தோம்.

இந்த நாட்டை முன்னேற்றுவதற்காக எதையும் விட்டுக்கொடுக்க நாம் தயார். மகிந்த வந்து எம்முடன் இணைவதற்கு விரும்பினாலும் இணைத்துக் கொள்வோம்". என்றார் அவர். (எ)

# மீன்பிடித்துறையில் முதலிட சீனா ஆர்வம்

இலங்கையில் மீன் உற்பத்தியில் முதலீடு செய்வதற்குச் சீன முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

சீன முதலீட்டாளர்களுக்கும் மீன்பிடி மற்றும் நீரியல் வள இராஜாங்க அமைச்சர் திலிப் வேதஆராச்சிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மீன் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளுக்கு முதலீடுகளை வழங்கத் தாம் தயாராகவுள்ளனர் என அவர்கள் கூறியுள்ளனர்.

சீனாவிலுள்ள மேலும் சில முதலீட்டாளர்களையும் இதன் பொருட்டு அனுப்பிவைக்க முடியும் என முதலீட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர் என மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு அறிவித்துள்ளது.(உ)





நெல்லியடி வடக்கு கல்வத்தை கிராம மக்களின் நன்மை கருதி, கட்டைவேலி –நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தினால் அந்தப்பகுதியில் புதிய கிளை ஒன்று இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. சங்கத்தின் உபதலைவர் செ.சபாநாயகம்(ஜே.பி) இந்தக் கிளையினைத் திறந்துவைத்தார். (அ–11)

# மொரகஹகந்த மின்நிலையம் தேசிய மின்கட்டமைப்புடன் இணைவு

தேசிய மின்கட்டமைப்புக்கு 25 மெகவோட் கொள்ளளவு மின்சாரத்தை சேர்க்கக்கூடிய மொரகஹகந்த நீர் மின்னுற்பத்தி நிலையத்தின் அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அதன் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எதிர்வரும் மழைக்காலத்துடன் மின்னுற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். இலங்கையில் குறுகிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மின்னுற்பத்தி நிலையம் இதுவாகும். மொரகஹகந்த நீர்த்தேக்கமானது கடல் மட்டத்திலிருந்து 132 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.(உ)





யா/அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலய முத்தமிழ் விழா நேற்று சிறப்புற நடைபெற்றது. இதில் யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத்தின் துணைத்தலைவர் பேராசிரிர் தி. வேல்நம்பி, ஓய்வு பெற்ற கோப்பாய் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் வே .பாலசுப்பிரமணியம் ஆகியோர் விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர்.(ஆ)


# தகர்ந்தது மொசூல் மசூதி

ஈராக்கின் மொசூல் நகரில் இருக்கும் அல் நூரி என்னும் தொன்மையான மசூதியை ஐ.எஸ் தீவிரவாதிகள் தரைமட்டமாகியுள்ளனர்.
”மசூதியையும் அதன் கோபுரங்களையும் இடித்திருப்பது மொசூல் நகருக்கும், ஈராக்குக்கும் எதிரான குற்றமாகும். இதற்கான பொறுப்பை ஐ.எஸ் இயக்கமே முழுமையாக ஏற்க வேண்டும்” என்று அமெரிக்க இராணுவத் தளபதிகளில் ஒருவரான ஜோசஃப் மார்ட்டின் கூறியுள்ளார்.
இந்த மசூதியிலிருந்துதான் 2014 ஆம் ஆண்டில் ஐ.எஸ் இயக்கத்தின் தலைவர் பக்தாதி “இஸ்லாமிய தேசம் “ அமைக்கப்பட்டதாக அறிவித்தார். மொசூல் நகரை முழுமையாக கைப்பற்றிய ஈராக் படைகள் மசூதியை நெருங்கிய சமயத்தில் பெரிய வெடிப்பில் மசூதி இடிந்து விழுந்ததாக சொல்லப்படுகிறது. ஆனால் ஐ .எஸ் இயக்கமோ அமெரிக்க விமான தாக்குதலிலேயே மசூதி தகர்ந்ததாக கூறுகிறது.(இ)



# மன்னரைச் சுட்ட சிறுவர்கள்

ஜேர்மனியில் விடுமுறையைக் கழிக்க வந்த தாய்லாந்து மன்னர் மீது றப்பர் குண்டுகளால் தாக்குதல் நடத்திய இரு சிறுவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
தாய்லாந்தின் புதிய மன்னர் மஹா வஜிரலங்க்கோர்ன் ஜேர்மனியின் பவேரியா பகுதியில் தங்கி விடுமுறையைக் கழித்து வந்தார்.
இந்த நிலையில் கடந்த 10 ஆம் திகதி இரவு 11 மணியளவில் தமது மிதிவண்டியில் அவர் நகரை வலம் வந்தார்.
அப்போது 13 மற்றும் 14 வயதுடைய இரு சிறுவர்கள், அவர் மீது ரப்பர் குண்டுகளை பயன்படுத்தும் துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.
இந்த தாக்குதலில் மன்னர் காயமுற்றாரா இல்லையா என்ற தகவல் வெளியாகவில்லை. எனினும் தாக்குதலில் ஈடுபட்ட சிறுவர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (இ)



# ஆதரவு

பாஜகவின் குடியரசுத் தலைவர் வேட்பாளர் ராம்நாத் கோவிந்துக்கு அதிமுக அம்மா கட்சி ஆதரவளிப்பதாக முதல்வர் பழனிசாமி அறிவித்துள்ளார்.
சென்னையில் முதல்வர் பழனிசாமி தலைமையில் அதிமுக அம்மா கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை மாலை நடைபெற்றது.
இதில் அதிமுக அம்மா கட்சி எம்.எல். ஏக்கள், எம்.பி.க்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் என பலர் கலந்துகொண்டனர். ஆயினும் தினகரன் ஆதரவு எம்.எல். ஏக்கள் வெற்றிவேல், தங்க தமிழ்ச் செல்வன் உள்ளிட்டோர் கலந்துகொள்ளவில்லை.
கூட்டத்துக்குப் பிறகு பேசிய முதல்வர் எடப்பாடி பழனிசாமி, ‘பாஜக குடியரசுத் தலைவர் வேட்பாளர் ராம்நாத் கோவிந்துக்கு அதிமுக அம்மா கட்சி ஒருமனதாக ஆதரவளிக்கிறது’ என்று அறிவித்தார்.(இ)

# விவசாயிகள் தீவிரவாதிகளா?



“துயரத்தில் துடிக்கும் விவசாயிகளுக்கு உதவி செய்வதை விடுத்து, அவர்களைத் தீவிரவாதகள் போல மத்திய அரசு நடத்துகிறது” என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி குற்றம்சாட்டியுள்ளார்.
இதுகுறித்து தன் டுவிட்டர் பக்கத்தில் அவர், “போராட்டம் மூலம் தங்களது நிலைமையை உணர்த்த முயற்சிக்கும் விவசாயிகளை மத்திய அரசு அடக்க முயற்சிக் கிறது. அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்காமல் தீவிர வாதிகளைப் போல நடத்துகிறது. கடந்த 3 ஆண்டுகளில் ஆயிரத் துக்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். எனவே குறைந்தபட்ச ஆதார விலையுடன், உற்பத்தி செய்யும் வேளாண் பொருட்களை விற்க விவசாயிகளுக்கு உரிமை வழங்க வகை செய்யும் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வரவேண்டும்” என குறிப்பிட்டுள்ளார். (இ)

# பேச்சு பேச்சாய் இருக்கனும்



விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், இந்திய அரசுக்கு எதிராகவும் பேசியதாக தன் மீது தொடரப்பட்ட தேசத்துரோக வழக்கில் இருந்து விடுவிக்குமாறு வைகோ நீதிமன்றைக் கோரியுள்ளார்.
“இந்த வழக்கிலிருந்து என்னை விடு விக்க வேண்டும். இதுபோன்ற வழக்குகளில் வெறும் பேச்சு மட்டுமே குற்றமாகாது. அந்த பேச்சினால் ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்தால் மட்டுமே அது குற்றமாகும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. நான் பேசியதை மறுக்கவில்லை. ஆனால் அந்தப் பேச்சு தேசிய பாதுகாப்புக்கு எதிரானது அல்ல. இந்த வழக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சியால் என் மீது தொடுக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வழக்கில் இருந்து என்னை விடுவிக்கவேண்டும்” இவ்வாறு மனுவில் வைகோ கோரியுள்ளார். இந்த மனு மீதான விசாரணையை நீதிபதி கோகிலா வரும் ஜூலை 10 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.(இ)

# முட்டாள் ட்ரம்ப்

பரிஸ் காலநிலை ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியதன் மூலம் அமெரிக்க ஜனாதிபதி மிகப்பெரிய முட்டாள் தனத்தை செய்துவிட்டார் என பிரபல அறிவியல் ஆராய்ச்சியாளர் ஸ்டீபன் ஹக்கிங் கூறியுள்ளார். (இ)

# இளவரசர் பிலிப் வைத்தியசாலையில்!



பிரிட்டன் இளவரசருரும், மகாராணி எலிசபெத்தின் கணவருமான பிலிப் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.
இளவரசான பிலிப் உடல் நிலை மற்றும் வயது முதிர்வு காரணமாக செப்ரெம்பர் மாதம் முதல் எவ்வித அரசு மற்றும் பொது நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்நிலையில் இளவரசர் பிலிப் நேற்று இரவு லண்டனில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இது முன்னெச்சரிக்கை நடவடிக்கை தான் எனவும், தற்போது இருக்கும் உடல்நலக் குறைவு பிரச்சனை மேலும் அதிகரித்து விடக்கூடாது என்பதற்காகவே அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மகனுக்கு முடிசூடி சவூதி மன்னர் அதிரடி



சவுதி அரேபியாவில் அதிரடித் திருப்பமாக, தனது மகனை பட்டத்து இளவரசராக நியமித்து மன்னர் சல்மான் உத்தரவிட்டுள்ளார்.
எண்ணெய் வளமிக்க சவுதி அரேபியாவில் மன்னராக இருந்து வந்தவர் அப்துல்லா பின் அப்துல் அஜிஸ். இவர் 2015 ஆம் ஆண்டு, ஜனவரி 23 ஆம் திகதி மரணம் அடைந்தார். அதைத் தொடர்ந்து, அவரது ஒன்றுவிட்ட சகோதரர் சல்மான் மன்னர் ஆனார்.
சல்மான் மன்னர் ஆனதைத் தொடர்ந்து, இளவரசர் முகமது பின் நயேப்பை பட்டத்து இளவரசராகவும், இளவரசர் முகமது பின் சல்மானை பட்டத்து துணை இளவரசராகவும் நியமித்தார்.
இந்த நிலையில் திடீர் திருப்பமாக, தனது மகனும், பட்டத்து துணை இளவரசருமான முகமது பின் சல்மானை (வயது 31), பட்டத்து இளவரசராக நியமித்து மன்னர் சல்மான் உத்தரவிட்டார்.
மேலும் இதுவரை காலமும் பட்டத்து இளவரசராக இருந்த முகமது பின் நயேப், உள்துறை அமைச்சராக பதவி வகிப்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
பட்டத்து இளவரசராக நியமிக்கப்பட்டுள்ள முகமது பின் சல்மான், நாட்டின் துணைப் பிரதமராகவும் இருப்பார்.
அவர் தொடர்ந்து இராணுவம், எண்ணெய் உள்ளிட்ட துறைகளின் பொறுப்பையும் கவனிப்பார். (இ)



# தேசிய அணியில் கொக்குவில் இந்து மாணவி

சீனாவின் செங்கோ நகரில் நடைபெறவுள்ள சர்வதேச கூடைப்பந்தாட்டத் தொடரில் பங்கேற்பதற்கான இலங்கை அணியில், யாழ். வீராங்கனையான பாபு பாணு தெரிவாகியுள்ளார்.

இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கூடைப்பந்தாட்ட தொடரிலேயே இவர் பங்கேற்கவுள்ளார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவியான பாணு, பாடசாலை மட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்டதன் விளைவாகவே இந்த வாய்ப்பு இவருக்குக் கிடைத்துள்ளது. (ஐ)



## நீச்சல் ஜாம்பவானின்
# சுறா வேட்டை

நீச்சல் ஜாம்பவான் மைக்கல் பெல்ப்ஸ் மிகப் பெரிய வெள்ளைச் சுறாவோடு போட்டி போடவுள்ளார்.

நீச்சலில் ஜாம்பவானாக உலக அளவில் கொண்டாடப்படும் தடகள வீரரான மைக்கல் பெல்ப்ஸ், தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்காக கடலில் மிகவும் திறமையாக வேட்டையாடும் சுறாவோடு போட்டியிடவுள்ளார் என டிஸ்கவரி தொலைக்காட்சியின் செய்தி வெளியிட்டுள்ளது.

31 வயதாகும் பெல்ப்ஸ் ஒலிம்பிக் நீச்சல் போட்டிகளில் மட்டும் 23 தங்கப்பதக்கங்களை பெற்று 2016 ரியோ ஒலிம்பிக்குக்கு பின்னர் ஓய்வு பெற்றுள்ளார்.

மைக்கல் பெல்ப்ஸ் நீந்துகின்றபோது, அதிகபட்சமாக மணிக்கு 6 மைல் வேகத்தில் செல்லும் திறனுடையவர்.ஆனால், மிகப் பெரிய வெள்ளை சுறா மணிக்கு 25 மைல் வேகத்தில் நீந்தக்கூடியதாகும்.

"தங்கமகன் எதிர் பெரிய வெள்ளைச் சுறா" என்கிற தலைப்பிலான டிஸ்கவரி தொலைக்காட்சி நிகழ்ச்சி ஜூலை 23 ஆம் நாள் தொடங்குகின்றது 'சுறா வாரம்' நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக இது அமையும். (ஐ)

# வேலை தேவையா?

கூகுள் நிறுவனமானது உலகளாவிய ரீதியில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு Google for Jobs எனும் வேலைவாய்ப்பு தேடும் வசதியினை அறிமுகம் செய்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற Google I/O Developer Conference நிகழ்விலேயே இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இதன் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு உட்பட தாம் வசிக்கும் இருப்பிடத்துக்கு அண்மையில் காணப்படும் வேலைவாய்ப்பு தொடர்பிலும் பயனர்கள் அறிந்துகொள்ள முடியும். (ஒ)

# பட்டையைக் கிளப்பும் 'மெர்சல்'




இன்றையதினம் தனது பிறந்த நாளைக் கொண்டாடும் விஜயின் 61ஆவது படத்தின் பெஸ்ட் லுக்' மற்றும் பட பெயர் என்பன நேற்றையதினம் வெளிவந்து பட்டையைக் கிளப்பிவருகின்றது.

இப்படத்திற்கு 'மெர்சல்' என தலைப்பு வைத்துள்ளனர், அதேவேளை, எப்போதும் 'இளைய தளபதி' விஜய் என்றுதான் போடுவார்கள். ஆனால், இந்த முறை 'தளபதி' விஜய் என்றுதான் டைட்டில் வைத்துள்ளனர்.

இப்படத்தின் போஸ்டரில் 'மெ' என்ற எழுத்தில் மாட்டுக்கொம்பு போலவும் 'ல்' மாட்டின் வால் போலவும் அமைந்துள்ளது. 61 என்ற எண் முதல் எழுத்தில் மறைந்துள்ளது. மேலும் ரசிகர்களுக்கு சர்ப்ரைஸாக அந்த மெர்சல் எழுத்தை தலைகீழாகப் பார்த்தால் Vijay என்ற வார்த்தை தெரிகிறது.

நேற்று மாலை 6 மணிக்கு வெளிவந்த மெர்சல் 'பெஸ்ட் லுக்', ஒரு மணி நேரத்திலேயே 22 ஆயிரத்திற்கும் அதிகமான RT பெற்றுள்ளது.

இதன் மூலம் குறைந்த நேரத்தில் அதிக RT ஆன 'பெர்ஸ்ட் லுக்' மெர்சல்தான், அதேபோல் எப்படியும் விவேகத்தின் அனைத்துச் சாதனைகளையும் மெர்சல் முறியடித்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கை வீரர்கள் உடற்தகுதியை நிரூபிக்கவேண்டும்



இலங்கை வீரர்கள் உடற்தகுதிக்குப் பின்னரே போட்டிகளில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள், இதன்மூலம் இலங்கை வீரர்கள் தகுதியற்றவர் என்ற கருத்தாகாது என விளையாட்டுத்துறை அமைச்சர் தயசிறி ஜயசேகர தெரிவித்தார்.

போட்டியொன்றில் சிகார் தவான் 100க்கு மேற்பட்ட ஓட்டங்களை குவித்த பின்னர் களைப்பின்றி களத்தடுப்பில் ஈடுபட்டார். இதற்கு காரணம் அவர்களது உடற்தகுதியாகும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினர்.

ஏனைய நாடுகளில் கிரிக்கட் விளையாட்டுக்களில் பங்குகொள்ளும் வீரர்கள் இந்த உடற்தகுதியுடன் இருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான வீரர்களுடன் இலங்கை வீரர்கள் விளையாடும் பொழுது சொற்பநேரத்துக்குள் சோர்ந்துவிடுகிறனர். எதிர்கால கிரிக்கட் போட்டிகளின் போது போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்கள் உடற்தகுதி பரிசோதனையில் தகுதிபெறுவது கட்டாயம் ஆகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (உ)

# கொள்ளையடிக்க வருகிறார் சானியா



டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்ஷா சினிமாவில் நாயகியாக அறிமுமாகவுள்ளார்.

டென்னிஸில் புகழ்பெற்ற சானியா மிர்ஷாவின் அழகு திரைப்பட இயக்குநர்களையும் கவர, பலரும் அவரை சினிமாவில் நாயகியாக்க அழைப்பு விடுத்தனர்.

அவற்றையெல்லாம் கண்டுகொள்ளாமல் இருந்த சானியா மிர்ஷா தற்போது பொலிவூட் படத்தில் நாயகியாக அரிதாரம் பூச இருக்கிறார்.

இதனை பாலிவுட் இயக்குநரும், நடிகருமான பர்ஹான் அக்தர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "அதிர்ஷ்வசமாக சானியா மிர்ஷா வெள்ளித்திரைக்கும் வருகிறார். அவரது தந்தை இம்ரான் மிர்ஷாவும், சானியா மிர்சா நடிக்க இருக்கும் படத்தில் இணைந்து நடிக்க இருக்கிறார்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவிடமும் தோல்வி



இந்தியாவுக்கு எதிரான உலகக் கிண்ணப் பயிற்சியாட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்துள்ளது.

11ஆவது பெண்கள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 24ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பிக்கவுள்ள நிலையில் நேற்று நடைபெற்ற பயிற்சியாட்டம் ஒன்றில் இலங்கை - இந்திய அணிகள்மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 275 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இலங்கை அணி, 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 166 ஓட்டங்களையே சேர்த்தது.

இதன்மூலம் 109 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.

முன்னர் இங்கிலாந்துக்கு எதிரான பயிற்சியாட்டத்திலும் இலங்கை அணி தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பண வீக்கம்


தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2017 ஏப்ரல் மாதத்தில் 8.4% இருந்து 2017 மே மாதத்தில் 7.1% ஆக குறைவடைந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2017 மே மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பண வீக்கத்துக்கான பங்களிப் புகள் முறையே 4.6 %, 2.5 % ஆகும். அதேவேளை, 2016 மே மாதத்தில் பணவீக்கத்துக்கான இந்த இரு பிரிவுகளினதும் பங்களிப்புகள் முறையே 2.1 %, 3.1 % ஆக காணப்பட்டன. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2017 ஏப்ரல் மாதத்தில் 121.0 இருந்து 2017 மே மாதத்தில் 121.8 ஆக அதிகரித்துள்ளது. இது, 2017 ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 மே மாதத்தில் 0.8 சுட்டெண் புள்ளி அல்லது 0.7 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதாந்த மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.43 % ஆல் மற்றும் உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.21 % ஆல் அதிகரித்தமையேயாகும்.

## திருகோணமலையில் பல்கலைக்கல்லூரி



திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேசத்தில் பல்கலைக் கல்லூரி ஒன்று அமைக்கப்படவுள்ளது. நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் கஜந்த கருணாதிலக இத் தகவலை வெளியிட்டார். தேசிய தொழில் தகுதிக்கான 5 அல்லது 6 தரத்திலான கற்கை நெறியைத் தொடர்வதற்கு அனுராதபுரம் அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கு செல்ல வேண்டிய இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இதனை கருத்தில் கொண்டு திருகோணமலை மாவட்டத்தில் மாணவர்களின் நன்மைக்கருதி 434 மில்லியன் ரூபா செலவில் பல்கலைக் கல்லூரி ஒன்றினை அமைப்பதற்காக திறன்விருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சர் சந்திம வீரக்கொடி சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (உ)

## இன்றைய கருத்தோவியம்




### வீட்டுத்திட்டம் பெற்றவர்கள்

## வாடகை வீடுகளில்!

தென்மராட்சியில் கடந்த வருடம் 200க்கும் மேற்பட்ட வீட்டுத்திட்ட வீடுகள் பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்கப்பட்டன. இருப்பினும் பல வீடுகளில் பயனாளிகள் இதுவரை குடியமரவில்லை என வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பித்து விட்டு காத்திருப்போர் தெரிவிக்கின்றனர். வீட்டுத் திட்டம் பெறும் நோக்கில் பின்தங்கிய பிரதேசங்களில் குறைந்த செலவில் காணிகளை கொள்வனவு செய்து வீட்டுத் திட்ட வீட்டை கட்டி முடித்து விட்டு பின்னர் அந்த வீட்டில் குடியமராமல் நகரப் பகுதிகளில் வாடகை வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும் வசித்து வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதனால் தென்மராட்சியில் பல வீட்டுத் திட்ட வீடுகள் ஆள் நடமாட்டம் இன்றி காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது இவ்வாறான விடையங்கள் தொடர்பில் பிரதேச செயலகங்கள் மீள் பரிசீலனை செய்யவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஊ)

## அரச வைத்தியர்கள் திடீர் பகிஸ்கரிப்பு



சைட்டம் நிறுவனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது மேற்கொள்ளப் பட்டதாக கூறப்படும் தாக்குதலைக் கண்டித்தும் சைட்டம் நிறுவனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நாடளாவிய ரீதியில் இன்று காலை 8 மணி முதல் அரசவைத்திய அதிகாரிகள் சங்கம் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சைட்டம் நிறுவனத்துக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பொலிஸார் நீர்த் தாரைப் பிரயோகம் மேற்கொண்டதில் சுமார் 80 பேர் வரை பாதிக்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பணிப்புறக்கணிப்பால் பல வைத்தியசாலைகளில் நோயாளர்கள் அதிருப்தியுடன் வீடுதிரும்பியதாக தெரியவருகின்றது. (உ)

## 50 அடி பள்ளத்துள் பாய்ந்தது முச்சக்கரவண்டி



லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை டயகம பிரதான வீதியில் லிந்துலை வைத்தியசாலைக்கு அருகாமையில் முச்சக்கரவண்டி ஒன்று நேற்று இரவு 9 மணியளவில் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது. முச்சக்கரவண்டியில் பயணஞ் செய்த 04 பேர் படுகாயங்களுக்குள்ளாகி லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். முச்சக்கரவண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்ததன் காரணமாகவே இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஊ)

## விபத்து

### இளைஞர் இருவர் பலி

திருகோணமலை கந்தளாய் பிரதான வீதியில் பாலம் போட்டாறுப் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். முள்ளிப்பொத்தானை 98ஆம் கொலனி அரபா நகரைச் சேர்ந்தவர்களான அப்துல் ரவூப் சுஜான் (வயது 28), நஹீர் முஹம்மட் (வயது 20) ஆகியோரே இந்த விபத்தில் பலியாகியுள்ளனர். நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோட்டார் சைக்கிளொன்று மோதியதாலேயே, இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. திருகோணமலை நகரிலிருந்து கந்தளாய் நோக்கிப் பயணித்த லொறியை பாலம் போட்டாறுக் கோவிலுக்கு முன்பாக நிறுத்திய அதன் சாரதி, அக்கோவிலில் வழிபாட்டில் ஈடுபட்டுவிட்டு உண்டியலுக்கு காணிக்கை செலுத்தச் சென்றுள்ளார். அப்போது, வேகமாக வந்த மோட்டார் சைக்கிளொன்று, வேகக் கட்டுப்பாட்டை இழந்து அந்த லொறியுடன் மோதிவிபத்திற்குள்ளானதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (உ)

## வரி ரத்து

இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி நீக்கப்படவுள்ளது. இது தொடர்பிலான திருத்தச் சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடுவது பற்றி நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பித்த யோசனைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச் சரவை உப குழுவின் யோச னைகளுக்கு அமைய, இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)



## மாணவர் ஆட்சேர்ப்பு திகதி நீடிப்பில்லை

2018 ஆண்டில் தரம் ஒன்றில் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். இதற்குரிய கால அவகாசம் மீண்டும் நீடிக்கப்படமாட்டாதென பாடசாலை அலுவல்கள் பணிப்பாளர் கமனி பெரேரா தெரிவித்தார். ஒரு மாணவர் சார்பில் ஆகக்கூடுதலாக ஆறு பாடசாலைகளுக்கு விண்ணப் பிக்க முடியுமென மேலும் பணிப் பாளர் கூறினார். (உ)


### விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை



வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)

வேதனம்: 15,000 + ஊக்கப்படி

தொடர்புக்கு: 021 300 4848, 077 657 5907 ethirolimedia@gmail.com


## நாளை நாளும் கோளும்

23.06.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 09ஆம் நாள்

சதுர்த்தசி மு.ப. 11.49 வரை ரோகிணி மு.ப. 07.42 வரை மரணயோகம்

இராகுகாலம் 10.22-11.54 சுபநேரம் 05.54-07.24 எமகண்டம் 02.54-04.24

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெருமை | உயர்வு | சாந்தம் | புகழ் | கவனம் | பாராட்டு | மேன்மை | அமைதி | ஆக்கம் | நலம் | அனுகூலம் | வீண்செலவு |


## அந்த நாள் ஞாபகம்......!



**1658 .06.22**

போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.

# மன்னிப்பு கோரினார் எஸ்.பி



தன்னுடைய கருத்துகளால், அஸ்கிரிய பீடத்தைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் மற்றும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஆகியோர் வருந்தியிருப்பின், அதற்காகத் தான் அவர்களிடம் மன்னிப்புக் கோருவதாக, அமைச்சர் எஸ்.பீ.திசாநாயக்க கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே, அமைச்சர் இவ்வாறு கூறினார். கண்டி அஸ்கிரிய பீடத்தின் சங்க சபையினால், அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில், கண்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டின் போது, தற்போதைய அரசாங்கத்தில் பதவியிலிருக்கும் அமைச்சர்கள் சிலர் பற்றி, மகாநாயக்க தேரர்கள் அதிருப்தி வெளியிட்டிருந்தனர். (உ)

# சித்தரின் உடல் சமாதி வைப்பு





கடந்த செவ்வாய்க்கிழமை காலமான சுழிபுரம் - சம்பில்துறை சம்புநாதஈச்சரத்தின் தர்மகத்தாவான, நரசிங்க சித்தர் சுவாமிகளின் திருவுடல் நேற்றுப் புதன்கிழமை அவரது சீடர்கள், பக்தர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான மக்களின் பங்குபற்றலுடன் சம்புநாதஈச்சரத்தில் சமாதி வைக்கப்பட்டது.

சித்தரின் திருவுடலுக்கு ஆலய வளாகத்தில் நேற்று யாகக் கிரியைகள் நடைபெற்றன. சித்தரின் சீடர்களும் பக்தர்களும் இணைந்து இந்த யாகக் கிரியைகளை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் அவரது திருவுடல் சமாதி வைக்கப்பட்டது. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளும் இதில் கலந்துகொண்டார்.(ஆ)

## ஜனாதிபதி மைத்திரி பங்களாதேஷ் விஜயம்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் பங்களாதேஷுக்கு விஜயத்தை மேற்கொள்வார் என, பங்களாதேஷ் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கையில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான, நிவாரண நிதித்தொகை ஒன்றினை பங்களாதேஷின் உயர்ஸ்தானிகர், ஜனாதிபதிக்கு வழங்கினார். இதன்போதே இந்த விஜயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளதாக, அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (உ)

## பதுக்கி வைத்த மணல் முள்ளியில் கண்டுபிடிப்பு



வடமராட்சி முள்ளிக் காட்டுக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 5 லோட் சட்டவிரோத மணலைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபடுபவர்கள் முள்ளிக்காட்டில் மணலைப் பதுக்கி வைத்து விட்டு, பொலிஸாரின் கண்காணிப்பு குறைவான வேளைகளில் அவற்றை தாம் விரும்பிய இடங்களுக்கு கடத்தி வந்தனர்.

இந்தத் தகவல் பொலிஸாருக்கு கிடைத்ததையடுத்து, நேற்றிரவு நெல்லியடி பொலிஸ் இரண்டாம் நிலைப் பொறுப்பதிகாரி விமலவீர தலைமையிலான குழுவினர் அங்கு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதில் கண்டுபிடிக்கப்பட்ட 5 லோட் மணல் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.(ஆ-11)

## 'உதிரி' ஆற்றுகை நாளை

தமிழகத்தில் "குழந்தைகளின் உலகம் நாடி", "உதிரி" போன்ற பல்வேறு படைப்புக்களை பல இடங்களிலும் அரங்கேற்றி பாராட்டுப் பெற்ற 'உதிரி நாடக நிலம்' என்னும் அமைப்பைச் சேர்ந்த வளர்ந்து வரும் இளம் கலைஞர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இவர்களின் 'உதிரி' என்னும் தனிநபர் நாடக அளிக்கை நாளை வெள்ளிக்கிழமை மாலை 03.00 க்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இயற்கையே நமது உயிர், அதை இழந்து இயந்திரங்களாக வாழக்கூடாது என்ற கருத்தை முன்வைத்து சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த அளிக்கை அரங்கேற்றப்படவுள்ளது. நாடகத்துறை சார்ந்த கலைஞர்கள்,ஆர்வலர்கள், மாணவர்கள் அனைவரும் இவ்வாற்றுகையை பார்வையிட்டு பயன்பெறலாம் என திருமறைக் கலாமன்றம் அறிவித்துள்ளது. (ஆ)

### ஒழுங்கு.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது பதவிகளை இராஜினமாச் செய்திருந்தனர்.

விசாரணை அறிக்கைகளின் அடிப்படையில் இவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டதாலும், அமைச்சர் பதவிகளை இழந்தாலும் இவர்கள் இருவருக்கும் இன்றைய அமர்வில் முன்வரிசை ஆசனங்கள் ஒதுக்கப்படாது என்றே எதிர்பார்க்கப்பட்டது. கடந்த காலங்களில் சபையின் முன்வரிசை ஆசனங்கள் முதலமைச்சர், கல்வி அமைச்சர் , சுகாதார அமைச்சர் , விவசாய அமைச்சர் , மீன் பிடி அமைச்சர் , பிரதி அவைத்தலைவர் எனும் ஒழுங்கில் அமைந்திருந்தன. இன்றைய அமர்வில் முன்வரிசையில் முதலமைச்சர் , சுகாதார அமைச்சர் , மீன் பிடி அமைச்சர் , பிரதி அவைத்தலைவர் , முன்னாள் கல்வி அமைச்சர் , முன்னாள் விவசாய அமைச்சர் என ஆசன ஒழுங்கு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. (எ-01)

### கசிப்பு.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டினை சோதனை செய்துள்ளனர். அதன்போது கசிப்பு உற் பத்தி பொருட்கள் கோடா வடிசாராயம் என்பன கைப்பற்றப்பட் டன. இந்நிலையில் அவ்வீட்டில் வசித்து வந்த 25வயதுடைய பெண் கசிப்பு உற்பத்தியில் ஈடு பட்டதாக கைது செய்யப் பட்டு இன்று பருத்தித் துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டார். (ஊ-11)




### சிவாஜி.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயக்கொடி தெரிவித்துள்ளார். இவ்வாறாக கருத்துக்கள் வெளியிட்டோர் தொடர்பில் இதுவரையில் 21 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

"இனவாதச் செயற்பாடுகள் தொடர்பில் எமக்கு இரண்டு வகையான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதில் முதலாவது வகையான, இனவாதத் தாக்குதல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு இணங்க இதுவரை 12 சிங்களவர், இரண்டு முஸ்லிம்கள், ஒரு தமிழர் என மொத்தமாக 15 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 22.06.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.